www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

XII-பJ

# மாதத் தேர்வு – ஜூன், 2024

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 6x1=6

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல ஆடுகின்றன.

3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. பொருத்துக.
   i) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
   ii) விலங்குகள் - 2) மேய்ச்சலை மறந்தன
   iii) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
   iv) பசுக்கள் - 4) மரங்களிலிருந்து வீழ்ந்தன
   அ) 1, 3, 4, 2 ஆ) 3, 2, 4, 1
   இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

5. தமிழில் திணைப்பாகுபாடு .......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
   இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிமோனை, அடிஎதுகை  ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை  ஈ) சீர்எதுகை, அடிமோனை

## பகுதி - II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்:

### பிரிவு - அ

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்: 3x2=6

7. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
8. கவிஞர் சிற்பி இயற்றிய கவிதை நூல்கள் யாவை?
9. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.
10. மழையைக் கணிக்கும் அறிகுறிகள் நான்கினைக் கூறுக.

### பிரிவு - ஆ

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்: 3x2=6

11. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.
12. உவமைத் தொடரினை வாக்கியத்தில் அமைக்க.
கிணற்றுத் தவளைபோல
13. புணர்ச்சி விதி தருக.
புதுப்பெயல் (அல்லது) கையேந்தி
14. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கலை, களை, கழை

## பகுதி - III

ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடையளிக்கவும்:

### பிரிவு - அ

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்: 2x4=8

15. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



16. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

17. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

## பிரிவு - ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்! 2×4=8

18. மையக் கருத்துடன் ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

- கண்ணதாசன்

19. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

20. எண்ணங்களை எழுத்தாக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - IV

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2x6=12

21. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

22. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரி.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4

23. 'ஓங்கலிடை' . . . எனத் தொடங்கும் தன்னேர் இலாத தமிழ் பாடல்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com